## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## ஆத்தூர்
------

### அசல் வழக்கு எண்.2/2023

**2026 ஆம்** வருடம் ஜுன் மாதம் 09 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.3–இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கவேல் | ஜாதி | : | |
| த.பெ | : | முத்துச்சாமி | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | அக்கரைப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 78/2026 |
| தேதி | : | 01.04.2026 | | | |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் எந்த ஊர் என்றால் அக்கரைப்பட்டி ஆகும். பிரதிவாதிகள் ஆனந்தகுமார், தீர்த்தம் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் ஆனந்தகுமார், தீர்த்தம் ஆகியோர் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் ஆனந்தகுமார் கட்டிட வேலைக்கும், தீர்த்தம் சமையல் வேலைக்கும் செல்கிறார். வாதி நாச்சிமுத்து ஊரில் நிறைய நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாதி வட்டி தொழிலில் கந்து வட்டியும் வசூல் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

இந்த வழக்கின் நம்பர் என்னவென்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி, பிரதிவாதிகளுக்கு பணம் கொடுத்ததை நீங்கள் நேரடியாக பார்த்தீர்களா என்றால் நான் பார்த்தேன். நானும், வள்ளியம்மையும் உடன் இருந்த போது தான் வாதி, பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார். அவர் கையொப்பம் செய்து பெற்றுச் சென்றார். புரோ நோட்டில் யார் கையொப்பம் செய்து கொடுத்தது என்றால் ஆனந்தகுமார் மற்றும் தீர்த்தம் ஆகிய இருவரும் கையொப்பம் செய்து கொடுத்தார்கள்.

உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தை யார் எழுதியது என்றால் யார் எழுதியது என்று எனக்கு தெரியாது. உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் கையொப்பம் வித்தியாசமாக உள்ளது என்றால் சரியல்ல, நானும் அவரும் தான் கையொப்பம் செய்தோம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் இந்த புரோ நோட்டை

எழுதியதும், சாட்சியுமான என்று கூறியுள்ள இடத்தில் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ரூ.35,000/- த்தை என்ன மதிப்பிலான நோட்டுகளாக கொடுத்தார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். ரூ.35,000/- கொடுத்தது தெரியும்.

வா.சா.ஆ.1 ஆணத்தை பிரதிவாதி உங்களுக்கு முன்பாக கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்றும், நீங்கள் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் வாதிக்கு ஆதரவாக பல்வேறு நீதிமன்றங்களில் இதேபோன்று சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor